செய்தி வெளியீடு எண்: 086 நாள்: 02.02.2018

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (2.2.2018) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் சென்னை, மூர்த்திங்கர் தெரு திட்டப்பகுதியில் 112 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 960 அடுக்குமாடிக் குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், 43 கோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சென்னை, சேனியம்மன் கோயில் திட்டப்பகுதியில் கட்டப்பட்டுள்ள 464 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் மதுரை, பூங்கா நகர் திட்டப்பகுதியில் கட்டப்பட்டுள்ள 76 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மக்கள் தொகை பெருக்கம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உறைவிடத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், குறிப்பாக ஏழை, எளிய நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில், பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சென்னை, வியாசர்பாடியில் உள்ள மூர்த்திங்கர் தெரு திட்டப்பகுதியில், தரை மற்றும் ஏழு தளங்களுடன், 10 கட்டட தொகுப்புகளுடன், ஒவ்வொரு குடியிருப்பும் தலா 416 சதுர அடி பரப்பளவில், 112 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 960 அடுக்குமாடிக் குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், சென்னை, தண்டையார்பேட்டையில் உள்ள சேனியம்மன் கோயில் திட்டப்பகுதியில், தரை மற்றும் மூன்று தளங்களுடன், 9 கட்டட தொகுப்புகளுடன், ஒவ்வொரு குடியிருப்பும் தலா 397 சதுர அடி பரப்பளவில், 38 கோடியே 39 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 464 அடுக்குமாடிக் குடியிருப்புகள்;

மதுரை, பூங்கா நகர் திட்டப்பகுதியில், தரை மற்றும் மூன்று தளங்களுடன், ஒவ்வொரு குடியிருப்பும் தலா 374 சதுர அடி பரப்பளவில், 5 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 76 அடுக்குமாடிக் குடியிருப்புகள்;

என மொத்தம் 156 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள 1500 அடுக்குமாடிக் குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு.ச.கிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய முதன்மைச் செயலாளர் / மேலாண்மை இயக்குநர் திரு.ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 2.2.2018**